206

கிறிஸ்து * பகவான்

க்ருபா கீர்த்தனம்.

இஃது

திருநெல்வேலி பாலம்,

கனம் ஜி. எஸ். சாமுவேல் நாடார் அவர்கள்

விருப்பத்தின்படி,

தமிழ்க் குழந்தை,

காயாமொழி அ. கு. ஆதித்தன்

அவர்களால்,

இயற்றப்பெற்றது.

1926. [அணா 4

Q6: 417
N26
77648

கிறிஸ்து பகவான்

க்ருபா கீர்த்தனம்.

இஃது

திருச்செந்தூர்த் தாலுகா,

காயாமொழி ஆதித்த மரபு,

நிமிடக்கவி பௌத்திரர்

அ. குமாரகுருபரர் (A. K. GURU)

என்னும்

அ. கு. ஆதித்தன்
(தமிழ்ப் பண்டிதர், S. B. K. ஹைஸ்கூல் அருப்புக்கோட்டை)

அவர்களால்

இயற்றப்பெற்றது.

1926.

கிறிஸ்துபஹறவான் கிருபாகீர்த்தன சாற்றுக்கவிகள்.

வெண்பா.

அன்புருவந் தாங்கு மமல குருபரன் சீ
ரென்புருகப் பாடி யிசைப்படுத்தான்—றன்பேர்
சமரசசன் மார்க்கத் தமிழ்புலவன் காயைக்
குமர குருபரனன் கோர்ந்து.

D. மாசில்லாமணி நாடன்
தமிழ்ப்புண்டிதர், **S. T.** காலேஜ் பாளையங்கோட்டை

தரவுக் கோச்சகக் கலிப்பா.

அழலொழுகு மாதித்த னருமாவின் வழித்தோன்றி
மழவயது மாண்பொருளு மன்னியசீர்க் கலையறிவுங்
கிழமையுற வுதித்தோனுங் கீர்த்திமிகு குமாகுரு
பழந்தமிழின் பாங்கறிந்தோன் பண்டிதரைப் பிறங்கிடுவோன்.

எம்மதமுந் தன்மதமா யெவ்வுயிருந் தன்னுயிராய்
நம்பிக்கை யொடுங்கருதி நலம்பயக்க வாழ்நாளில்
இம்மையினே றீடேற எழில்வானை யிகந்தொழித்துத்
தம்மையொரு பலியெனவே தகனித்த யேசுபரன்.

புண்ணியஞ்சா லறச்சிறப்புப் புத்தமுதாய் விளங்குமொரு
வன்னியத்தை யுலகோர்க்கு வருணித்துக் காட்டவுன்னிப்
பண்ணியபல் கீர்த்தனங்கட் பரிவுடனே யளித்திட்டான்
கன்னியஞ்சேர் சங்கிதக் கவிஞெளியுந் துலங்கிடவே.

J. G. சுந்தரம், தமிழ்ப்பண்டிதர்
St. ஜோசப் ஹைஸ்கூல், இட்டமொழி.

முகவுரை.

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வமச் செல்வம்
செல்வத்துளெல்லாந் தலை"

கல்விச்செல்வம் பொருட்செல்வமென்னு மிருவகைச் செல்வங்களுள். கல்விச்செல்வம் மேம்பட்டதென்பதுலகறிந்த விஷயமாகும். இக்கல்வியானதுலக இயல்பை அறிவித்து ஈச்வரனிடத்தே பக்தியுண்டாக்கக் கூடியதாயிருப்பின் உண்மைக் கல்வியாகுமேயன்றி, ஏனைய இலௌகீக வழிகளிலறிவைச் சிதறச் செய்யினுண்மைக்கல்வியாகாது.

கல்வி விருத்திக்குக் காரணம் பாஷாபி விருத்தியாம். நந்தாய்ப்பாஷையோ இயலிசை நாடகமென மூவிதமுளதெனினும் அவற்றுளிசைத்தமிழே பெரும்பாலும் யாவர் மனத்தும் எளிதிற் பதியக்கூடியதானபடியின் பண்டைய வித்துவான்கள் தம் நூற்கள் யாவையுஞ் செய்யுள் ரூபமாக்கினர். அடியார்களும் இறைவனை ஜெபத்துடன் இசை மூலமாய்த் தம் வசமாக்கியிருக்கின்றனர். சாதாரண வசனபாகங்களின் தெய்வீக விஷயங்களைவிட, இசைத்தமிழானது இறைவன் பெருமையைச் சுருக்கத்தில் விளக்கிக்காட்டி சிறியோர் பெரியோர் யாவருளத்தையுங் கவருமென்பது துணிபு.

இக்காரணம்பற்றியே, நவீன கீர்த்தனரூப இசைத்தமிழ் விவிலிய மதம் சம்பந்தப்பட்டமட்டும் சிறிது குறைவுற்றதென்பதை யுன்னி, அக்குறைவை நிறைவேற்ற திருநெல்வேலிப்பாலம், கனம் G. S. சாமுவேல் நாடார்

அவர்கள் வேண்டுகோட்கிணங்கி இதை இயற்றலானேன். ஷெடியார் சிரேஷ்ட புத்திரர் ஸ்ரீமான் துரைராஜ் நாடார் அவர்களால் ஒவ்வொரு கீதமும், ஹார்மோனிய சுதிலயத் துடன் இசைகூட்டி சரிபார்க்கப்பட்டுளது. ஆனபடியின் சங்கீதம் பயில்வோருக்கு, நமது கீர்த்தனங்கள் சிரமத்தை விளைவிக்காதென்பதும் எமது துணிபு.

சைவமதாபிமானிகள் எம்மீது ஓர் குறைகூறவாலாம். எங்கும் நிறைந்த ஈஸ்வரன் ஒருவனென்பதும், மதங் கொண்டலையாது "என் கடன்பணிசெய்து கிடப்பதே" என சத்கருமப் பெரியாருக்குச் சம்மதமாய் நடப்பதே எனது கொள்கையானது பற்றியும், காந்தீய மதத்தைக் கொண்ட யான் எம்மதத்தையும் குறைகூறாது அவ்வவ்மதத் தினரைச் சீர்பெற நாட்டுவது என் கடமையாதலாலும் இக்கருமத்திற் றுணிந்தேன்.

ஆ. அ குமரகுருபரர்

26—11—26

கிறிஸ்து பகவான்

க்ருபா கீர்த்தனம்.

கிறிஸ்து பஹவான் கிருபா விசைக்கீதம்
விரித்தித் தமிழவணி வாயுலவ திரித்துவ
மூவ ருடந்து மூப்பிலாப் பாதுகாப்பு
ஆவர் அகவாய் கரம்.

1. கமாஸ்—சுஜனஜீவனு—என்றமெட்டு—ரூபகம்.

பல்லவி.

ஏசு நாதனே உப
தேச போதனே தேவா

அநுபல்லவி.

மாசில் தேவனே சீயோன்
மலையின் வாசனே
மனந்திரும்பி யேவந்தேனும தருகில் தங்கவே (தே)

மத்தேயுலூக்கா மாற்குயோவான் மனமகிழ் ஸ்தோத்ரா
இத்தரை புகழ்ந்தென்றும் போற்று மெருசலேம்க்ஷேத்ரா.
சங்கீத ஜோதி ஆதித்
தன் கீத மோதி
தரையின் மூன்று பொருள்பெறவே தருவாயொருவரம்—
க்றிஸ்து (ஏசு)

2. ஜெயந்தஸ்ரீ—மருசேலரா என்ற மெட்டு—ஆதி.

பல்லவி.

மரிபாலகா மாதேவனே.

அநுபல்லவி.

மரிபாலதேவா குரு நீயே காவா
திரியேக மூவா வரமீயவா (மரி)

சரணம்.

பொங்திப்பிலாத்து மன்றமேயுதித்து
நிந்தனைகள் கேட்டே நீ சிலுவை யேற்றாய்
வந்தமா மரியாள் வாசங்களணிந்தோய்
சுந்தர ஸ்ரீ ஆதித் தன்கீதமு வந்தோய் (மரி)

---

3. ஹரஹரப்பிரியா—சங்கல்பமே என்ற மெட்டு—ஆதி.

பல்லவி.

இந்தநேரம் ஏழையனேவா
ஏழையினிட ரறுத்தருள்வாய் (இந்)

அநுபல்லவி.

சந்தோஷமாய் சாமீயுன்பாதம்
சர்வதண்டஞ் சமர்ப்பித்தேனுண்மையாய் (இந்)

சரணம்.

மன்னனே யுன் செந்தா மரைப்பாதந்தந்தா
லென்னிடர்கணீங்கு மேழையென்றந்தாய்
தஞ்சம் நீயே தாமதமேனோ
தித்தகீத மோதினே னுபாதையால் (இந்)

4. தோடி—சாதரமுக்குகா என்ற மெட்டு—ஆதி.

பல்லவி.

ஆதரிதிருபரீ ஆசிதந்து

அநுபல்லவி.

வேதமே விநியோகா ஸிதயமற
வேண்சதி நீயலால் வேறுண்டோ சொல்லேயே (ஆ)

சரணம்.

நானிலமகிழ்மரி யாள்புத்திரனே
உலகபரனே தோத்தரித்தேன்
என்னிடர்கணிதீர்வா யேந்தலே கோபம்
என்மீது உனக்காகா எழிலாதித்தமோகா (ஆ)

---

5. ஸ்ரீ—கலிலோஹரிஸ் என்ற மெட்டு—ஆதி.

பல்லவி.

குருவே கிறிஸ்தேசு மகிபா சிறு
குழந்தை யென்முறை கேளும்—யெளியோர்க்கருள் (குரு)

அநுபல்லவி.

திருவே நான் அநுதினமனதுனே
தேடினேனுடினேனே—பரமனருள் (குரு)

சரணம்.

காணு கலியாணமன்றில்படு கணத்தினிற்றந்தவனே
விணுயுரு பூஜைகள் புரிந்திடும் விழலுக்கும்பரிந்தவனே
தேனுமிர்த ஆதித்தகீதத்தின் தோத்திரமுவந்தவனே
பரமனருள் (குரு)

---

6. செஞ்சுருட்டி—செந்தின்மாநகர் என்ற மெட்டு—ஆதி.

1. பெத்லேகெம்நக ரந்தனில் தோன்றிய
பெம்மானுமெம் மேசுநாதன் புவிப்
புண்ணியர் போற்றும் நல்வேதன் கொடு—
வஞ்சனைபுரி மாந்தருக்குத்தன்
தந்தையாரிடம் கெஞ்சி நின்றுமே—
பாவநாசங்கள் செய்யச்சித்தங்கொண்ட
பண்ணவன் தன் திருப்பாதமே என்று
மெண்ணினோர்க்கில்லைகு ரோதமே.

2. மண்ணின்மேல் மாந்தர் பண்ணியபாவத்தைத்
தன்பாவமாகவே யேற்றாய் இன்று
அன்பருள் நீயெனக் காற்றாய் ததி—
அண்டினேனுனைத் தெண்டம் செய்துயான்
மண்டலம்புகழ் மாட்சிபெற்றுமே—
மண்ணாதி மூன்று ஆசை மறந்து நான்
முத்தியைக் கோரியே வந்தேன் இங்கு
முன் செய்த பாவத்தை நொந்தேன்.

3. பெற்றமைந்தரைப் பாலித்தருளுதல்
பிதாவின் திருத்தொழிலன்றோ நீ
பேணதிருந்திடில் நன்றோ நொந்து—
பிஞ்ஞகாநா னுன்னையெண்ணிக்கார்
மஞ்ஞைபோலவே மனமகிழ்ந்திப்போ—
இத்தரைமகிழ் முத்தமிழ் கீதத்தின்
சங்கீத சாகரநேமி ஆதித்
தன் கீத மோதினேன்ஸ்வமி.

7. பூமிமெச்சிடும் என்ற மெட்டு.—சிந்து.

1. ஜோதி சொரூபனு மாதித்தன் கீதத்தின்
ஸ்தோத்திரன் பலக்ஷேத்திரன் கிருபாநேத்திரன்
கடல்—சூழும் வையமீது வாழும் பல்லுயிரின்
சூத்திரன் குண பாத்திரன்.

2. அங்கயற்கண்ணியா ளென்னைமரியாளின்
பாலனே—அனுகூலனே—குண சீலனே
ஒரு—அத்திமாமரத்தைத்தச்ச பித்தபுண்யமன
வாலனே மனு வேலனே.

3. பாவத்துள் வீழ்த்திடும் பொல்லாதமண்பொன்
வேசையால் நொந்தேனையா இல்லைமாசையா
இந்த—மேதினி என்துயர் தீதவிர்ப்பாய்த்திரு
மேசையா வந்தே ஓசையால்.

4. என்று முனை நம்பி இன்பம்பெறவெண்ணி
வஞ்சமே விட்டது நெஞ்சமே அருணீ கொஞ்சமே
திரு—யேசோவாமைந்தனார் வாகாயிருப்பர்
பாதக்கஞ்சமே இனித்தஞ்சமே.

---

8. இசைந்த எறும்—திருப்புகழ்.

விளைந்தமணிக ளென்திருநாளையிற் கொய்தோர்க்காய்
விற்பனமாயுப மானங்களாலே விரைவாக
சிறந்த சாந்தி பற்றலர்மனதில் சேர்வித்தோய்
சிந்தனைசெய்தேனு னுன்திருநாமத்தைத் திருவேதா

வளைந்துமண்பெண் பொன்னுசை எந்தனை வருத்தாது
வகன்று சென்றிட வாதித்தன்கீதத்தால் தொழுதேனே
மறந்துசிறியன்யான் மயங்கியபோது மடியேனை
மன்னித்து உன்னருள் தண்ணளிபுரிவாய் மரிபாலா.

---

9. மலடிவயிற்றுமகன்.—என்றமெட்டு.

1. சிறுமியின் பக்திவலையாலே புவிச்
சீடர் பவத்திற்கோரரம்போல பலச்
சிறப்புகடிரண்டவோருருப்போல இத்தரைமீதில்.
2. சுந்தர ரூபமாய் வந்தவரே சில
சீடர்க்குபதேசம் தந்தவரே கொடுஞ்
சிலுவையிலுயிரைத் துறந்தவரே என் குருநாதா.
3. கூடுவிட்டாவியைக் காட்டினோரே சில
நாரிகடைலங்களுட்டினரே உனை
நாடினேன் முத்தமிழ் பாட்டினலே அருள்புரிவாயே.
4. கானாவூர்க்கலியாணமன்றில் பலர்
காணவேரசமுண்டாக்கித்தந்தீர் இக்
கடையருக்காகப்புவியில் வந்தீர் எரு சலேம்வாசா.
5. எப்போதுமைக்கண்டு களிப்பேனோ அன்று
அப்பஞ் சிலமீனளித்தவரே இன்று
ஏழைக்குத்திருக்கண் விழிப்பீர் நீரே ஒரு துணையாக.
6. தத்தளித்தோராதரவுமின்றி ஆ
தித்தகீதமேயோதிநின்று உனை
நித்தமுந்தொழுதேனே மனமுவந்து திருமரிபாலா.

ராஜா M. R. கோவிந்தசாமி

10. பைரவி—கழுகுமலைக்கு நாம் என்ற மெட்டு—ரூபகம்.

பல்லவி.

சீயோன்மலைக்கு நாம் நேராய் யேசுவை
சேவிக்கப்போவோம் வெகு ஜோராய் சீராய் (சீ)

அநுபல்லவி.

1, எண்ணிய இயற்கை வளங்களை கண்ணிணை கண்டுகளிக்க
2. மாருதி மரத்தில்தாவ வாரிதி வனப்புங்காட்டும்
3. பிளப்பால் வளப்பங்காட்டிப் பேரறிவுள்ளோர் வாழும்.

சரணம்.

சங்கடம் நீக்கிய சாதுக்கள் வாழ்மலை
சர்வத்துடனங்கு தோன் றுஞ் சமுத்திரவலை
அங்கிருப்போருக்கெக்காலுமில்லை கவலை
அண்டினபேரை யாதரிக்குமருடி வலை

அத்தரையே நித்தமுமா
தித்தனர் கீ தத்தருட்பா
தத்திமிதா ளத்துடனு
நத்திவாழுஞ் சுத்தநற்கா (சீ)

ராஜா M. R.

11. மத்யமாவதி—திரிலோகமும் மெட்டு—ரூபகம்.

பல்லவி.

கடலோரத்தில் கழகங்கூட்டிய
தேவா—ஜீவா—காவா—யெனையே.

அநுபல்லவி.

உடலோடுலகஞ் சதமென நம்பி
பஞ்சபா தகங்கடினம்
அஞ்சாது புரிந்து மனம்
வாடினே னினைநாடினேன் பதந்
தேடினேன் கீதம் பாடினேன் கதி (க)

சரணம்.

உன்னத சீயோன்கிரியில் உவந்து நீர் செய்வீர் வாசம்
தன்னலம் விண்டே தந்தீர் தரணியில் தினம்பிரகாசம்
அண்ணலைக் கண்டு செய்வர் அன்பர்கள் பெருங்கரகோசம்
பண்ணவன் தரிசனத்தால் பவம்பழி பொய்கள் நாசம்.

புண்ணியங்கள் பண்ணியுனை
மண்ணின் மீது யெண்ணியவர்
முன்னர்வரு மின்னல்களை
மன்னித்தருள் விண்ணவரே (உட)

தொகையறா

அநுதினமுமனம்நினைந்து அகமெலிந்தேங்கினேன்
உன் அருள் சுரந்து காவா
மனுமுறை வழுவாது தினம் நடந்து வேண்டினேன்
மன்னவா சீயோன் தேவா.

(அநு பல்லவி எடுப்பு)

திரிலோகமும் நின் புகழ் தங்கவா
தித்தகி ததோதி
முத்திபெற வேநினைத்தேன்—தேவா—ஜீவா—காவா.

12. குமரனையே பாடி என்ற மெட்டு

பல்லவி.

யேசுவையே தேடிப்
பூஜிப்போம் நாம் பாடி

அநுபல்லவி.

சிகர மீதிலமர்ந்த சிஷ்யர்க்குபதேசந்தந்த
விரகவெம்மை தணிந்த வாலை மரி பயந்த (யேசு)
கானவூர் மணவதூ வாரின்குழாமது
சேனுவீரன் றந்தது ஜெகம்புகழ்பறந்தது (யேசு)

தொகையறு.

அடியார்க்காய் மண்ணுலகில் அவதாரஞ் செய்த
திரியேக தெய்வமே
மிடி நீக்கும் வழிகாட்டில் தர்மநெறி
நின்பரிவாலுய்வோமே.

சரணம்.

சித்தம்வைத்தேனேபாராய் சீக்கிரமாகக் காவா
நித்த அமுதப்பாவா லேத்தினேனிங்குசேர்வாய் (யேசு)

---

13. பாலாபிஷேகம் என்ற மெட்டு

பல்லவி

சீயோன் மலைமீது சையோக ராஜனே
சீர் பெற்ற இம்மானுவேலவனே

அநுபல்லவி

சேயாகப் பாவியைப் பாவிப்பாய் பாவிப்பாய்
தேவனே யிம்மானு வேலவனே.

தொகையறு.

மோஷா தேவா நாவா லுனையநுதினம் நத்திேனனெனக்காவா
தூயா நேயா ஆயா குணமென் மனமுதித்து நீ யுட்காராய்.

முடுகு.

அன்னையி னேசத்தை யருளொடு கொண்டோன்
பன்னிரு சீடரைப் பாரினில் விண்டோன்.

பாட்டு.

பக்தியாய்ப் பணிவோர் முத்தியே பெற்றிட
பண்ணவா தண்ணளி நீ புரிவாய் (சீயோ)

தொகையறு.

மகானு பாவா மாசற்றவா அரூபா
தேவானுகூலா திவ்ய மங்களா சொரூபா.

முடுகு.

சமயஞ் சமயமிது எனது முன் வரவே
அபயம் வேண்டினே னொருவரந் தரவே.

பாட்டு.

சாதித்து உத்தம ஆதித்தன் கீதத்தால்
சாஷ்டாங்க தண்டஞ்ச மர்ப்பித்தேனே (சீயோ)

---

14. ராஜவிசு வாசலாலா என்ற மெட்டு.

பல்லவி.

வாலவயது மரியாள் பாலகனே
திருப் பாலகனே.

அநுபல்லவி.

பூலோக நீதி பொழிந்திடும் ஜோதி (வால)

தொகையரு.

பூலோகமானிடர் மனவிருள் நீங்கிட பொழிந்தாய் நீ
உன்னுதிரமே
மேலோக வானவர் அவனியிலுதிக்கையில் மேகமாதிர
மதிருமே.

முடுகு.

அப்பஞ் சில மீனனனைவோர்க் கீந்தோன்
எப்போதும் பக்தரி னிதயத்தி லயர்ந்தோன்.

பாட்டு.

ஆதித்தன் கீதமேற்று மாண்டவனே
சிலுவை மாண்டவனே
முட்கள் பூண்டவனே. (வால)

---

15. தாதாபாய் நௌரோஜீ என்ற மெட்டு.

பல்லவி.

ஆள்வாய் நீ யேசு நாதா.

அநுபல்லவி.

அன்றுடுமுனை மன்றுடினேனே. (ஆள்)

சரணம்.

அம்மை யப்பரும் நீயே
ஆட்கொண்டாதரிப்பாயே
ஐந்து அப்பமீன் எஞ்சவே பலர்க்கு
விந்தையிற்றந்த மந்திர குருவே. (ஆள்)

தொகையறு

மூவாசை மூடிமயங்கும் மூடனையாட்கொள்ள வருவாய்
நாவாலே யுனை நத்தினேன் தேவா நலவரமொன்று தருவாய்

பாட்டு

ஜோதிமாமரியின் நேசா
சேவித்தேன் சீயோன் வாசா
ஆதித்தன் கீதம் ஓதிமுத்தமிழ்
வீதி நிற்கிறேன் ஜோதி சுந்தரா (ஆள்)

---

16. தேசிகம்---சோமசேகரன் என்ற மெட்டு---ஆதி

1. மாமரியாளகமுவந்த பாலன் பாலன் பாவ
மன்னிப்புக் கேட்போருக்கனு கூலன் சோலன்
காமவெகு ளிகுணநிர் மூலன் மூலன் ஒரு
கன்னிமேல்கல் லெறியச்சொன்ன ஜாலன் ஜாலன்.

2. ஜீவஒளியாக வெங்கும் நின்று நின்று உலகின்
பாவமொழி வகைபலந வின்று அன்று
சீடர்குழாத் துடனேவலஞ் சென்று சென்று கொடுஞ்
சிலுவையிலா விபிரித்தாய் நன்று அன்று.

3. மங்களகல் யாணக்கானு மன்று வந்து அங்கு
மாஜனங்கட் குப்பானமு வந்து தந்து
தன்குறை தீ ராருக்கு மனம் நொந்து நொந்து நுந்
தந்தையிடம் வேண்டுவாய்ப ரிந்து நொந்து.

4. சங்கத் தமிழ் காயாமொழி நீதி யாதித் தனின்
சமரஸம தக்கீதத்தை யோதி யோதி
இன்பஞ் செல்வம் தினம்பெருக ஜோதி ஜோதி ஒளி
யைப்பாடிவ லம்வருவோம் வீதிவீதி (மாமரி)

---

17. சுதேச மகமத்தலி என்ற மெட்டு.

பல்லவி.

பெத்லேகிம் நகர்ப்பிறந்தோன்
பக்தர்க ளகமுவந்தோன்.

அநுபல்லவி.

இத்தரை தனிலுயர்ந்தோன்
இரத்தமாரி சொரிந்துயர்ந்தோன் (பெத்)

சரணம்.

பொறுமைப் பூஷணக் குன்று
பொன்றுத் தவத்தில் நின்று
கருமப் பிணியைக் கொன்று
கரையேற்றும் நம்மையின்று (பெத்)

தோகையறா.

பஞ்சமா பாதகம் நெஞ்சினில் குடிகொண்ட
பாவியெனை யாதரி,
அஞ்சாம லிப்பிர பஞ்சவாழ்வநித்ய
உண்மையறிவித்த கேஸரி.

பாட்டு

நித்தமுன் திருவேதம்
நத்தியே பணிந்தேன் பாதம்
முத்தமிழா தித்த கீதம்
பக்தியுடனளிக்கும் நீதம் (பெத்)

---

18. மன்மளாடியவா என்ற மெட்டு.

நொந்து வாடினேனே தேவா நொந்துவாடினேனே
என்றுமூன்று பாசத்தால்கிறைந்தசு மெலிந்துஇன்று (நொ)

1. அத்திமாம ரத்தைச் சபித்தவா
அன்னைபாய் மரியகத்திலுதித்தவா
சித்திரமா மாவீ பிரித்தவா
சித்தத்துட ணனுதினமே
முந்திநியைஎண் ணிக்கணமே. (நொந்)

2. தேனுமிர்தப் பிர சங்கம் புரிந்தவா
கானலூர் மணத்தில் கடி மது தந்தவா
வானுலகம்விண்டு மண்டலம் வந்தவா
வரந்தர தருணமுமிதுவே
பரனுனைத் தொழுதேனே குருவே. (நொ)

3. குஷ்டரோகம் நிவிர்த்தியே செய்தவா
கொடியவர் செய்பா வங்களைக் கொய்தவா
முப்பது ஆண்டு இத்தரை உய்தவா
முத்தமிழ் கீதத்துணையா
நித்தபாசுரந் தட்சணையே. (நொந்து)

---

19. காந்தி மகான் போலுண்டோ என்ற மெட்டு.

பல்லவி.

ஏசுபிரான் பாதந்தேடி வாழ்ந்திடுவோம் மகமம
கிழ்ந்திடுவோம் பதம்ப
ணிந்திடுவோம்.

பாட்டு.

1. தீட்சண்ய மூர்த்தி திருவருட் பூர்த்தி
திருமரியாளின் பாலன் குணசீலன்
அனு கூலன் மன வாலன்
தினம் செய்தனர்பல தேசம்
அவர் சீடர்களுபதேசம்
மிகு சாந்தகுண எந்த லாம்பூ
பாந்தம்விடு வேந்தனுக்கும்
உத்தமவா இத்தன்புகழ் நித்தியனும் கர்த்தனெனும். (எசு)

2. கருணைக் கடாட்சம் கதியினி மோட்சம்
பக்தர் மனஒய்யாரன் அதிதீரன்
கெம் பீரன் விண்கு மாரன்
நமது இருதயப் பிரகாசம்
அங்கு இயற்றுவார் பாவநாசம்
புவி பாவித்திர ளாவிக்காக
மேவிச் சிலு வையிலேகி
அன்பர்பெறு துன்பந்தவிர் இன்பக்கடல் எங்கள் குரு(எசு)

---

20. சகாணு——ஐயாப் பழனிமலைவேலா என்ற மெட்டு.

1. சீயோன்மலையின் மேல் வாசா உன்னைச்
சேவித்தேன் ஜோதிப்ரகாசா
தாயாள் கன்னிமரி நேசா ததி
தோத்திரம் செய்தேன் பவநாசா.

2. முப்பது வயதுள்ள தீரா என்
முன்வந்து காட்சி நீ தாராய்
இத்தரை புகழுங்கெம்பீரா இந்
ஏழைக்கருள்புரி ஐய்யாரா.

3. இன்னும் பாராமுகமாமா இந்த
ஏழையின்கலி நீங்குமாமோ
சின்ன வயதிற் செல்லாமா உன்
சீடரை நீ பிரிய லாமா.

4. நல்ல குண மாதர் அலற உனைப்
பல்லாயிரவர் பின்றொடர
சொல்லால் மாதுமரி கதற சேயன்
யூதாஸனும் உம்மைவிட்டுச் சிதற.

5. இத்தரை என்று மகிழ் கவியா
தித்த கீதத்தினாலென் சிறுநா
நித்தமும் புகழுமுன் கிருபா
கடாக்ஷமே தந்து நீ காவா.

---

21. பிலஹரி——ரேங்கநாயகமே என்ற மெட்டு—ரூபகம்.

பல்லவி.

நங்கை பாலகனே
நம்பியே யழைத்தேன் நாயகமே திரு (ந)

அநுபல்லவி.

தூயா தொழுநச
ரேயா நீகண்பார
ராயா சுகுணமா. (நங்கை)

சரணம்.

செய்தமா பாவத்தால் சிந்தையும் கன்னிட
உய்யவே ஓர்வழி யுண்டென உன்னிடம்
ஆவ லாய்வந்தேன்
பாவ மொழிப்பாய்
ஜீவ ஒளியே திரு (நங்கை)

2. உன்னத சீயோனி னையார மானவா
என்னிதய மகிழ் கெம்பீர வானவா
பத்தி யாய்த்தினம்
மத்தே யுநால்வர்
சத்தி யதேவா திரு (நங்கை)

3. காதல் கவருடல் கள்ளுண்டல் பொய் சொல்லல்
ஈதல் மறுத்தலெனு மைந்து பாதகப்
புழுவை ரக்ஷிக்கக்
கொலுவை விட்டு நீ
சிலுவை ஏற்றாயே (நங்கை)

4. தட்டினால் திறக்கப்ப டுமென்ற வுண்மையின்
திட்டத்தை நம்பித்தி னந்தினந் தூய்மையாய்
ஜோதியே வுனக்
காதித் தன்கீதம்
ஓதி வேண்டினேன். (நங்கை)

22. ப்பாக்—கலியாணஞ் செய்து வையுமே என்ற
[மெட்டு—ஆதி.

பல்லவி.

கண்டாலானந்தமிகுமே
காதலறியாக் கன்னி
சூதகத்தின் பலனைக் (கண்)

1. கற்ற நல்லறிவெனுங் கலப்பையாற்றுக்கி
கட்டிகள் மேடாகுங் களங்கத்தை நீக்கி
தண்ணீரெனுமன்பு தரணியில் போக்கி
நன் மனவயல் பக்திப் பயிரை யுண்டாக்கிக் (கண்)

2. அத்திமரத்தையடி மைக்காகச் சபித்தார்
சித்திர சிலுவையில் தனதாவி பிரித்தார்
மத்தேயுநால்வரை மனநதொழுவித்தா
தித்த கீதத்தினல் தினம் ஸ்தோத்தரித்துக் (கண்டா)

---

23. கல்யாணி-நம்பினேனுனையே என்ற மெட்டு-ரூபகம்.

பல்லவி.

நொந்து வாடினேனே ஏசு
மேசையாமுவாசை யாலே

சரணம்.

1. உலக ஆசை சூழ்ந்து மூட
விலகிடாதுனை நான் தேட
பலமுறை உன்பேரில் பாட
பார்த்தும் பாதம் சேர்த்திடாததால். (நொ)

2. அநுதினமுனை நினைந்தேன்
ஆவலாய் ஜெபம் புரிந்தேன்
தேடியே யென் னிதங்க ளன்றேன்
தேவி புதல்வா பாவி யலறி. (கொ)

3. ஆதித்தன் கீதமே யோதி
சாதித்து நாட்டினேன் னீதி
ஜோதி! ஒரு மந்திரம் காதில்
சொல்லு மென்று அல்லும் பகலும். (கொ)

---

24. பாண்டியனீன்ற மீனாக்ஷி என்ற மெட்டு.

பல்லவி.

1. எங்கு மன் திரியேகமேவா ஏழைக்கு
இரங்கு மாதேவா
பங்கமில் மரியாளின் சேயா பக்தர்வ
ணங்கு நச ரேயா.

தொகையறு.

பலகாலுமுந்தனைப் பாவியான் மனஜெபம்
பண்ணினே னெனக்கிரங்காய்
விலை மாதர் போகமும் வெள்ளிபூ வாசையும்
விழலெனத் தவிர்த்தேன் துங்கா.

2. கண்டக முடியோனின் பாதம் வேண்டிடில்
கருணைப்ர சாதம்
உண்டாகி மல்கும் ஞான போதம் இதற்காக
உணர்வோம் சத்ய வேதம்.

தொகையறா.

அன்னையாள்வந்து அலறியபோதன்று
அருட்காட்சி நீயே தந்தாய்
பின்னையுன் சீடர்க்கும் பக்தர் குழாத்திற்கும்
பலகையில் யாவியீந்தாய்.

3. சாதித்து காரியங் கொள்ளும் சமரஸ
சங்கீத கண்யன்
ஆதித்தன் நீதியே சொல்லும் கிறிஸ்துவின்
அன்பி னுரு புண்யன்.

---

25. ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு.

பல்லவி.

ஏசு நாதப்யா ஒரு
ஆசிதாதுய்யா.

1. பாசமறுத்தவனே பக்தர் முன்னுதித்தவனே
நேசமரிபுத்திரனே நீணிலவொப்பற்றவனே. (ஏ)
2. அத்தியைச் சபித்தவனே அடியவரின் மித்திரனே
மத்தேயுதோத்திரனே மானிலத்தின்சூத்திரனே. (ஏ)
3. புண்படுத்தும்பொன்னுசை பொல்லாத மண்ணிைசை
கண்கவருங்கன்னியாசை களைந்துவுன்னைநினைந்து
[வந்தேன். (ஏ)
4. சங்கீதங் கடலாமாதித் தன்கீதந்தினமுமோதி
இங்கிதம் பெருகஜோதி இலங்கவே யென்னிதத்
தில்நீதி. (ஏசு)

---

26. அம்மா மதுரை மீனாக்ஷி என்ற மெட்டு.

1. உத்தாரங்கொண்டநற்பரமே நின
தடியார்க்கு உதவும் நின்கரமே ததி
தந்தால் நீ யொருவரமே
தினம் பெறுவேன் திறமே, தினம் பெறுவேன்...

2. சிங்காரத் தோப்பிலாதாமே.வா என்று
சிருட்டித்ததிரியேகமேவா ததி
தோத்திரஞ் செய்தேனன்றேவா
சிறியேனெனைக்காவா சிறியேனெனைக்காவா....

3. எக்காலுமுந்தனை முன்னிட்டு சிறு
இடர்கள் புரிகுணத்தைவிட்டு
பக்திப்பயிரை மனம்நட்டு
பணிவேன்பாதந்தொட்டு பணிவேன்பாதந்......

4. ஆதித்தனருள் தமிழ்க்கீதம் என்று
அருளும் நல் மெஞ்ஞான போதம்
ஜோதியின் வரப்பிரசாதம்
சொல்லும் சத்யவேதம், சொல்லும் சத்ய
[வேதம்.

---

27. காம்போதி—இராம நாமமே என்ற மெட்டு—ரூபகம்.

பல்லவி.

வாது ஆகுமோ என்மீது பூதராஜனே பவவுருசசடணில் (வா)

அநுபல்லவி.

நாணிதங் கொண்டே யுனையே 77648
நற்றவா பற்றினேன் நளினமரிகுமாரா. (வாது)

சரணம்.

1. தினந்தினமுன் திரு வாலயந்தேடினேன்
தேடியே யென்குறை சொல்லியே பாடினேன்
தேவனின்று மதத்தால் வாடியே
தேறிலன் கோரியே தினமுனைநாடினேன் (வாது)

2. மச்சமைந் தப்பத்தை மன்றுளோர்க்கு யீந்தோய்
மன்னன் பிலாத்துவால் மன்னுயிர்க்குயிரீந்தோய்
மாசுநீங்க காயந்தாங்கி
மன்றினில் நின்றமே மனமுனை வழிபட (வாது)

3. மூடனேயானாலும் மறைதினம் வாசித்தேன்
முட்டந்தாளால் நின்று பன்முறை பூஜித்தேன்
ஆசைகள் விண்டேயுனக்கு
ஆதித்தன் கிருந்தை அனுதின மோதினேன் (வாது)

---

28. நாமநாதக்கிரியை—கதர்க் கப்பல் கோடி என்ற மெட்டு—ஆதி.

பல்லவி.

பவம் பத்துக்காதமோடுமே
பரன் தந்தமாயோகியின்—பாதாரவிந்தங்கண்டு (பவ)

அநுபல்லவி.

தவம்பலநித்யம் நாட்டி தாணியில் புகழீட்டி
ஜெபத்துள்ஜீவ அப்பத்தை சீருடன் கொள்ளில் பாட்
[டில் (பவ)

சரணம்.

1. பொறுமைப் பூஷணக்குன்று பிலாத்துமுன் வந்து நின்று
சிறுமையனேத்துக்கொன்று ஜெகமேகளிக்கவன்று
பாவிஜைய நொந்தார் நீள்ப லகைசேர்ந்தார்
தன தாவியீந்தார் தர்ம கனவான் மூன்று
தினத்திலெழுந்தார் (பவ)

2. சீயோன் மலேயின்வாசன் ஜெகம்புகழமுகீசன்
தாயாயிப்புவிபுளோரைத் தற்காக்கும் விசுவாசன்
சத்ய வேதம ஆ தித்த கீதம்
தரும் சுத்தபோதம் திரு தற்பரன் திருவ
ரப்ரசாதம் (பவ)

---

29. தேசிகமாக்ரு—சேந்தாழம்பூ என்ற மெட்டு—ஏகம்.

பல்லவி.

1. மந்தாரை கொழுந்தன்று நிசூடும்
மங்கைமரி சிறுபாலனே.

அநுபல்லவி.

எந்தாயுன் திருவடி எற்றிப்பணிந்தேபடித்
தேன்தினம்பாடல்யோ வான்புகழ் சீடனே
காண்டகு தீரனே யாண்டு நீ ரக்ஷிப்பாய் (செந்)

2. இச்சையுள்ளோர்க்கு நல் ரச்சிப்பை யளிக்கும்
ஈசனே சீயோன் வாசனே
கடல்சூழும் பூவுலகி லிடரேசுமாய் விலக
நீவந்து கொந்தவர் யாவந்தணித்திட
சாபம் பழிமிடி யாவுமொழிந்திட (மந்தா)

3. ஜோதிசொரூபனே ஆதித்தன் கீதம்யான்
பாடினேன் பதந்தேடினேன்
விண்டலமிருந்தவனே மண்டலமுவந்தவனே
ஆண்டவா நானுனை வேண்டியனுதினம்
நீண்டபிகபவந் தாண்டவே கூவினேன் (மந்தா)

---

30. செஞ்சுருட்டி—சடைமறைத்து மகுடம்—என்ற
[மெட்டு—ஆதி.

பல்லவி.

1. கண்டக முடிபுனைந்த யேசுநாதா பொன்
முண்டகமே யான திருச்செம்பொற்பாதா
பண்டுபன்னி ருவர்க்குப தேசபோதா இந்தப்
பாலனுக்குக் காட்சிதரயின்னும்வாதா பஞ்ச
பாவம் பழிகளை யிகழும் நல்ல
பரமனடி தினம்புகழும்
அன்பர்கள் துன்பமொ ழிந்திட யின்பமே
மறைமுதலே யனுதினமும் தா தா தா நீயே (கண்ட)

2. நாற்குணம் படைத்தசிறு மங்கை பாலா இன்று
நாகரீககவிராதித்தானு கூலா
போர்க்குண மொழித்த பெரும் புண்ய சீலா உனைப்
போற்றிபணிந்தேனே சிங் காரலோலா
அருமறை முதலே கண் பாரும் உம
தடியார் குறை தினந் தீரும்
ஆண்டவா வேண்டினேன் நீண்டநற் பாண்டித்யம்
சிறியேனு இனியருள வா வா வா ததி (கண்ட)

---

31. ப்யாக்—வேலவா உனை வேண்டினேன் என்ற மெட்டு-
[ஆதி.

பல்லவி.

...னை பதந்தேடினேன் வரந்தாவா நீ தாயகமே

அநுபல்லவி.

...ா மாவுலகெங்கும்ப்ரதாபனே காவாபூ நாயகமே.

சரணம்.

1. உன்னத சீயோனின் மாமலை வாசா
உன்னடியார்கள் செய்பவநாசா
உன்னினே னென்மனத் துன்னை என்னு
லுற்ற பிழை பொறு மன்னே.

2. தேவதேவன்யே கோவாவின் பாலா
தேடிய பக்தரின் நல்லனுகூலா
வாடியே கூவினேன் நானே என்
வறுமை போக்கு சீமானே.

3. நங்கைமரியாள் மகிழ் சிறு சேயா
நாடினே னுன்னையே நான்னசரேயா
நற்றமிழாதித்தன் கீதம் என்றும்
நன்மை பயக்கும் நல் வேதம்.

---

32. சுருட்டி—ஆனந்தம் ஆனந்தம் என்ற மெட்டு—ஆதி.

பல்லவி.

உன்னுங்கள் உன்னுங்கள் உன்னுங்களே துதி
பண்ணுங்கள் பண்ணுங்கள் பண்ணுங்களே.

அநுபல்லவி.

முட்கிரீடங்கொண்டவனைப் பற்றற வேவிண்டவனை. (உன்)

சரணம்.

I. மத்தேயுநால்வர்ம ணம்ஜெபித்தோ
அத்திமரத்தையன் றுசபித்தே
பத்தினிமரியி லுற்பவித்
பாவிகட்காகவு யிர்விடுத்தே

2. நீதித்துலாவாய் நி மிர்ந்து நின்றோனே
பேதிக்குமென யூ தாளைப்புகன்றோனே
வாதியாமற்பிலாத் துமுன்சென்றோனே
யாதித்தன் கீதம்போற் றஞ்சிறந்தோனே (உன்)

---

33. அம்பிகா உன்மகன்குகன் என்ற மெட்டு.

பல்லவி.

கண்டகக் க்ரீடம் கொண்டவன்
மண்டலர் பாவம் விண்டவன்

1. கண்டகம் பலர் களிக்க
கன்னியாள்கண் மழை செழிக்க
விண்டலர் குரலொலிக்க
வீதி யெங்கும் நீதி தங்கவே (கண்)

2. பைந்தொடி வாயலற
பக்தன் யூதாஸ் சிதற
உகந்தவர் மனம்பதற
உத்த மனாய் ரத்தம் சிந்தவே (கண்)

3 தேனுருந் தெரியனீக்கி
தெரிவையொன்றின் குற்றம்போக்கி
[illegible]னுவில் கள்ளுண்டாக்கிக்
[illegible]லை தீர்த்து உலகர்க் காகக் (கண்)

[illegible]ா சங்களினுல்
[illegible]து வா டினவர்தேற
[illegible]தமிழ் கீதத்தாலா
நித்த கீதம் நத்தும் சுத்தனும் (கண்)

---

34 பஹரியாலோ—என்ற மெட்டு.

பல்லவி.

நசரேயா யூதர் நத்தியராயா.

அநுபல்லவி.

நானிலமாந் தர்பவம் நின் நன்மனத்து நொந்தாய்
நன்மரந்தி லுன்புனித ஆவியீந்தாய் அடி
யார்க்காக வந்தாய் (நசரேயா)

சரணம்.

யேழையானும் வேண்டினே னென் னிதபம்வாரும்
எந்தனுக்கு நேரிடும் இடர்கடரும் இனி
யவரந்தாரும் புனி தபரஞ்சேரும்
ஆதித்தன் கீத நீதிநாடொறும்
வீதிபுலவி ஓதி நின்றிடும் (நசரேயா)

35 செஞ்சுருட்டி—துலங்கு செம்பொன் என்ற மெட்டு—ஆதி.

கரும்பினும் தீங் கனி மொழிபேசும்
கன்னிமரியாள் பாலா
கர்த்தனுன் பாதந்தஞ்சமே கவலை தீர்ப்பாய்
கலங்கிய தேழைநெஞ்சமே.

அநுபல்லவி.

1. காவா வாதித்தன் பாவா லேற்றினேன் (கன்னி)
2. குருட்டுமாந்தரி னிருட்டகற்றிய (கன்னி)
3. கண்டாலுனை எந்தன்கொடு சண்டாளம ழிந்துவிடும்—(கன்னி)

சரணம்.

மலையோரத்தினில் மாபெருஞ் சங்கம்
மறை முதல்ாளன்செய் வார்பிரசங்கம்
மோசேயின் முன் இயற்றிய தங்கம்
முழுவதும் தந்தையர் இயற்றினர் பங்கம்
சத்யவி ரதசிங்கம்
சன்மார்க்க துங்கம் (கரும்பினும்)

36. தன்யாசி—கனகசபாபதி என்ற மெட்டு—ஆதி.

பல்லவி.

தேவகுமாரனின் திருவடிநாந்தினம் தேடில் துயர் நீங்கும்.

அநுபல்லவி.

ஆவியா யவனியி லவதாரஞ் செப்பவர்
பாவியின் ஜென்மத்தின் பிணிநனி கொய்பவர் (தே)

சரணம்.

1. சத்தியவேதத்தை ஜெகத்திற்குத்தந்த
சத்குண மோசேயால் கற்பினை யீந்த
புத்தியின் தானியேல் சித்தமகிழ்ந்த
பித்தனும் பார்வோனின் செய்கையினைந்த் (தேவ)

2. இங்கவர் பேரினல் இலங்கவே நீதி
சங்கமாழியுலகில் சமரஸமோதி
தங்கிடுமிடர்களைத் தவிக்கவேயாகித்
தன் கீதம் பாடிநாம் ஜெபிப்போமேவீதி (தேவ)

---

37. ஹரிகாம்போதி—காட்சி கண்காட்சியே—ஆதி.

பல்லவி.

சாமியுன் காட்சியே சாந்தகுண மாட்சியே

அநுபல்லவி.

சுற்சனர்கு மூத்துடனே உச்சிதமாமலைபின்மேல் (சா)

சரணம்.

உத்தமபு ருஷனீரோர் உயரத்தைக் கொண்டீர்
சுத்தமனச் சீடர்களும் சூழ்ந்திருக்கக் கண்டீர்
இத்தரைபி ழைக்கப்பத்துக் கற்பனை நவின்றீர்
பித்தனும்பை காசத்தின்றிச் சோதனைகள் வின்டீர்

இத்தரையனுதினமுஞ் செழிக்க வரும்
இன்னல்தருமார்க்கங்களை ஒழிக்க
சித்தர் பக்தர் மன மாறக்களிக்க உனைச்
சேராதவர் மனமே தத்தளிக்க

உனது திரு ஜோதி
ஓதுங்குண ஆதித்
தன் கீதத்தை யோதித்
தெண்டஞ் செய்தேன் மேவி (சு.மி)

பஹவான் திருவிளையாடல்கள்.

38. பரமானந்தமெய்ப்பரங்குன்றேன்—என்ற மெட்டு.

பல்லவி.

வரவே இன்னும் தாமதமா மா
அவனிமீது.

அநுபல்லவி.

கார்முகில் தவழ்ந்திடும் சீயோனின் வாசா
கசடர்கள் புரிந்திடும் பாவவிமோசா
பாருளபக்தர்க ளிதப்பிரகாசா
பரிந்து தன் பிதாவிடம் மன்றாடு மீசா (வரவே)

சரணம்.

(1) கானாகலியாணததில்வந்து கவலை நீங்க
கருணாநிதிமதுவேதந்து கடந்துசென்று

(2) கன்னி நீ சோரமேபு குந்து கொண்டகணவர்
கணக்கிலவரென்று மொழிந்து

(3) பின்கப்பர் நாகூம்—வேந்தனின்
மாந்தனின் பாந்தத்தின் மைந்தனின் ரோகம்
நீக்கி (4) பெதஸ்தா—சிந்தையின்
நொந்துமெலிந்துயிருந்தவன் சோகம்

(5) நீக்கியே ஐந்து—அப்பமும் மச்சமும் சற்சனர் கூட்ட—
[மநேகம்

(6) புசிக்கப்பண்ணி—உக்ரச முத்திரம் சித்தியால் சுத்த
சையோகம்—கொள்ளவே செய்து

(7) மண்ணிலே சற்றுதுப்பியே கண்ணிலப்பிய வானுப்
(8) சீலோவாவை சேர்ந்து பார்வை [பியே
புண்ணிய வுனல் பெற்றிட புவிபோற்றிட பேரும் காட்டிட
கொஞ்சம்நொந்த—வர்க்குவிந்தை

இன்னில மகிழ் சத்திய மிகு உத்தம (9) லாஸ்மரித்தனன்
எனக்கேட்டு உயிருமீட்டு

(10) என்னைமறுத பிப்பவன் எனச் செய்பியே ஒப்பு வித்
காதையறு புற்பே தூரை [தானைக்

(11) செவிட்டுக்கொன்னையன் (12) கூம்பிபகையவன்
(13) முரட்டுலேகியோ ஞலிடர்ப்பட்டவன்
(14) ஊமை (15) ஆவிகொண் டோர்க்கும்
(16) அசுத்த ஆவிகள் பிடித்த கிரேக்குப்பெண்
சுத்தம் பொலியவூர் (17) அத்தியழியச்சு
பித்து அருள் விரித்து

(18) குஷ்டரோகி (19) பெரும் பாட்டுஸ்திரி
(20) நூற்றுக்கதிபதி வீட்டினூழியன்
பெற்ற நோயைய கற்றி

(21) ஆசனத்திமிர் வாதமுடையோன்
(22) பிசாசுகொண்டவன் (23) பேதுருமாமியி
(23] றந்த (யாயீர்) மகனெ ழும்ப
(24) சந்திரரோகமும் விந்தையினீக்கியே
(25) சப்த அப்பமா சபைக்குளே யீந்தும்
(26) சாகரமீது நீர்போக
(27) கானானியப் பெண் பேய் நீக்கிக்கொளவும்
(28) கபோதியிருவர் விழிகள் பெவும்
(29) பிசாசால் ஊமைவாய் நீக்க
(30) குருடரிருவர் திருஷ்டி பெறவும்
(31) கோரியவெள்ளிப் பணமீன்கொள்வும்
சிந்தை மகிழ்ந்தருள் புரிந்து
பொருந்திப்பிலாத்துதேகம் சிலுவையறைந்திடவு
(32) சிந்திக்கும்மரிகண்டு சிரகமகிழ்ந்திடவும்
(33) பந்தசீடர்கள் பின்னும் படகிலுவந்திடவும்
தந்தையாரிடஞ்சென்ற திரியேகதற்பரனே (வரே

---

39. மாதுபாக மானவா என்ற மெட்டு.

தேவ தேவன் பாலனே தேவனே மங்களம்
தேவனே ஆவிகு மாரனே மங்களம்
கர்த்தனே சத்யனே நித்யனே மங்களம்
திரியேகன் மரிமூலம்
அருள்பாலன் குணசீலன்
ஆதித்தன் கீதத்தின் ஜோதி மங்களம்

முற்றிற்று

ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸ்
அருப்புக்கோட்டை—26.